# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## போக்குவரத்து, பெருந்தெருக்கள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு

## இலங்கை புகையிரத திணைக்களம்

## அம்பன்பொல புகையிரத நிலையத்தில் தீவு மேடை (ISLAND PLATFORM) மற்றும் பயணிகள் மேம்பாலத்தை நிர்மாணித்தல்

**ஒப்பந்த இலக்கம்: SRS/F.8157**

01. இலங்கை புகையிரத சேவை பொது முகாமையாளர் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரினால் (மேல்நிலை) பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள வகையில் அம்பன்பொல புகையிரத நிலையத்தில் தீவு மேடை மற்றும் பயணிகள் மேம்பாலத்தை நிர்மாணிப்பதற்காக தகுதி மற்றும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. மதிப்பீட்டுக் கிரயம் ஏறத்தாழ 43 மில்லியன் இலங்கை ரூபாவாகும் (வெட் இன்றி)

இந்தச் செயற்றிட்டத்தில் அம்பன்கொல புகையிரத நிலையத்தில் சுமார் 820 அடி நீளமான தீவு மேடை மற்றும் பயணிகள் மேம்பால நிர்மாணம் உள்ளடங்கும். இந்த வேலை விடயத்தின் நோக்கமாக நிலத்தை அகழ்தல், கொங்கிறீட் வேலைகள், படிவ வேலைகள், வலுவேற்றுதல், மேசன் வேலை, PSC தூண்களை போக்குவரத்து செய்தல், முன்வார்ப்பு கொங்கிறீட் பெனல்களை பரப்புதல், கைப்பிடி வேலைகள், சாந்து பூசும் வேலைகள் மற்றும் நிறப்பூச்சு வேலைகள் என்பன உள்ளடங்குகின்றன.

தீவு மேடையின் மதில்களை நிர்மாணிக்கும்போது வரையப்பட்டுள்ள வரைபடங்களின் பிரகாரம் ரயில் தண்டவாளங்கள் (Rail uprights) பயன்பாட்டு நிர்மாண முறைக்கு விசேடமாக கவனத்தைச் செலுத்த வேண்டும் இதற்குத் தேவையான தண்டவாள பகுதிகள் இலங்கை புகையிரதத் திணைக்களத்தினால் வேலைத் தளத்திற்கு இலவசமாக வழங்கப்படும்.

02. நிர்மாணக் காலம் 180 நாட்களாகும்.

03. தேசிய போட்டி ரீதியிலான விலைமனு நடைமுறையினூடாக விலைமனுச் செயற்பாடானது நடாத்தப்படும்.

04. ஒப்பந்தம் கையளிக்கப்படத் தகுதி பெற, வெற்றியாளரான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலபடுத்தப்படாதிருக்க வேண்டியதுடன் கீழ்க்காணும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யவும் வேண்டும்.
- விலைமனுதாரர்கள், நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தில் (ICTAD) கட்டிட நிர்மாணங்களுக்கு C 6 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு செய்து கொண்டிருத்தல் வேண்டும்.
- 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பொது ஒப்பந்தங்கள் பதிவாளரினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் சான்றிதழ் விலைமனுதாரர் வசம் இருக்க வேண்டும்.

05. ஒப்பந்தம் கையளிக்கப்படுவதற்கான தகைமையின் தேவைப்பாடுகளில் பின்வரும் விடயங்கள் உள்ளடங்கும்.
- பிரதான ஒப்பந்தக்காரராக கடந்த 5 வருடங்களில், நிகரான மற்றும் சிக்கல் மிகு தன்மையையுடைய நிர்மாண வேலையில் ஆகக் குறைந்தது ஒரு ஒப்பந்த அனுபவத்தையாவது வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

06. கொழும்பு 10, டீ.ஆர். விஜேவர்தன மாவத்தை, இலங்கை புகையிரத சேவைகள், இல. 01, பிரதான பொறியியலாளர் (பாதை மற்றும் வேலைகள்) அவர்களிடமிருந்து 0112693725 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் 2025-09-26ஆம் திகதி முதல் 2025-10-16ஆம் திகதி வரையான வேலை நாட்களில் 09.00 மணித்தியாலம் முதல் 15.00 மணித்தியாலம் வரை விலைமனு ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.

பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்),
புகையிரத பெறுகைகள் உப திணைக்களம்,
ஒல்கொட் மாவத்தை, கொழும்பு-10. இலங்கை.
தொலைபேசி : 94 (11) 4600204 அல்லது 94 (11) 4600209
தொலைநகல் : 94 (11) 2432044
மின்னஞ்சல் : srs.slr@gmail.com, tender2@railway.gov.lk
இணையதளம் : www.railway.gov.lk

07. கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, இலங்கை புகையிரத சேவைகள், புகையிரத பெறுகைகள் உப திணைக்களம், பிரதிப் பொது முகாமையாளருக்கு (பெறுகைகள்) ஒரு எழுத்துருவிலான விண்ணப்பம் ஒன்றைச் சமர்ப்பித்து, 2025-09-26ஆம் திகதி முதல் 2025-10-16ஆம் திகதி வரையில் (விடுமுறை நாட்கள் தவிர) 09.00 மணித்தியாலம் முதல் 15.00 மணித்தியாலம் வரை மீளளிக்கப்படாத 10,000.00 ரூபா கட்டணத்தை ரொக்கப் பணமாகச் செலுத்தப்படுவதன் பேரில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றை கொள்வனவு செய்யலாம். ரொக்கப் பண கொடுப்பனவுகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

08. இரு பிரதிகளினால் விலைமனுக்களை 2025-10-17ஆம் திகதி 1400 மணித்தியாலத்திற்கு முன் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு (மேல் நிலை), பெறுகை உப திணைக்களம், இலங்கை புகையிரத சேவை, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10 எனும் முகவரிக்கு ஒப்படைக்க வேண்டும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளும் நேரம் முடிவடைந்தவுடன் இந்த நிகழ்வில் கலந்துகொள்ள விரும்பும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

09. 2026-01-15ஆம் திகதி வரை விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும்.

10. அனைத்து விலைமனுக்களுடனும் நான்கு இலட்சத்து முப்பதாயிரம் இலங்கை ரூபாவிற்கான (430,000.00 ரூபா) விலைமனுப் பிணை இணைக்கப்படல் வேண்டும். விலைமனுப் பிணையானது 2026-02-12ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.

11. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம், 2025-10-07ஆம் திகதி 11.00 மணித்தியாலத்தில் கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, இலங்கை புகையிரத சேவைகள், பெறுகை உப அலுவலகத்தில் இடம்பெறும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (மேல் நிலை)**
**இலங்கை புகையிரத சேவைகள்.**

**Ref. No. SRS/F. 8157**